# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண்: 021/2017பே
ஆணை எண். 54/2018, நாள்: 16–03–2018

திரு. K.P.K. சண்முகம்,
குடியிருப்போர் நலச்சங்கம்,
லட்சுமி நகர், சௌடேஸ்வரா நகர்,
பழனிசெட்டிபட்டி,
தேனி மாவட்டம். -- முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
பழனிசெட்டிபட்டி,
தேனி மாவட்டம். -- எதிர் மனுதாரர்.

## ஆணை.

முறையீட்டு மனுதாரர் திரு. K.P.K .சண்முகம், தலைவர், குடியிருப்போர் நலச்சங்கம், லட்சுமிநகர், சௌடேஷ்வரி நகர், பழனிசெட்டிபட்டி, தேனி மாவட்டம் என்பவரது 02.01.2017ம் நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.01.2017 அன்று பெறப்பட்டு முறையீட்டு மனு எண். 21/2017 என பதிவு செய்யப்பட்டது.. முறையீட்டு மனு மீது உரிய அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது :-

திரு K.P.K. சண்முகம் தனது முறையீட்டு மனுவில் மேற்படி நபருடன் சேர்த்து 300 குடும்பங்கள் லட்சுமி நகர் பகுதியில் வசிப்பதாகவும், இந்த பகுதியிலுள்ள இடங்களை காலஞ்சென்ற ஆடிட்டர் திரு N. சீனிவாசன் என்பவரிடம் விலைக்கு வாங்கி வீடுகள் கட்டி பல ஆண்டுகளாக வசித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். இப்பகுதிக்கு கம்பம் மெயின்

சாலையிலிருந்து வருவதற்கு ஆடிட்டர் திரு என். சீனிவாசன் அவர்களது பட்டா இடத்தினை அவரின் அனுமதியுடன் பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார். இக்குடியிருப்பு வாசிகள் பயன்படுத்தும் இரு மற்றும் நான்கு சக்கர வாகனங்களினால் இச்சாலை நெருக்கடியில் சிக்கித் தவிப்பதாகவும் மேலும் இச்சாலையில் ஒர்க் ஷாப் வைத்திருப்போர் இரு பக்கமும் வாகனங்களை நிறுத்துவதால் குடியிருப்பு வாசிகள் போக்குவரத்திற்கு பெரும் இடைஞ்சல் ஏற்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார். இச்சூழ்நிலையில் ஆடிட்டர் திரு என். சீனிவாசனுக்கு சொந்தமான சர்வே எண். 1436/5C1, C2 கொண்ட இடத்தில் லட்சுமி நகர் நுழைவு வாயிலில் சாலைக்கு வடக்கு மற்றும் தெற்கு பக்கம் கிழமேல் சுமார் 100 அடி நீளத்தில் தங்கள் குடியிருப்பு வாசிகள் சார்பில் தங்கள் பாதுகாப்பிற்கான காம்பவுண்ட் சுவர் கட்டியுள்ளதாகவும், இதனை கடந்த 16.11.2016அன்று காலை சுமார் 8.00 மணியளவில் பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரியும் திரு சித்திரைக்கனி மற்றும் பெயர் தெரியாத அடையாளம் தெரிந்த 5 நபர்கள் பேரூராட்சிக்கு சொந்தமான டிராக்டரில் வந்து தாங்கள் வடக்கு பக்கம் கட்டியுள்ள காம்பவுண்டு சுவற்றுக்குள் அத்துமீறி நுழைந்து தங்களது பொது சொத்தான காம்பவுண்ட் சுவற்றின் ஒரு பகுதியினை உடைத்து டிராக்டரில் அள்ளி எடுத்துச் சென்றதாக தெரிவித்துள்ளார். இதனைத் தட்டிக்கேட்ட தன்னையும், செயலாளர் திரு வெங்கடேஷ் மற்றும் தங்களுடன் இருந்த பொதுமக்களையும் மேற்படி செயல் அலுவலர் திரு.சித்திரைக்கனி, மற்றும் அவருடன் வந்தவர்கள் அசிங்கமாகவும் தரக்குறைவாகவும் பேசியதாகவும் தெரிவித்துள்ளார். தாங்கள் கட்டியுள்ள காம்பவுண்ட் சுவருக்கு வடக்குப் பக்கம் திரு ஆர். சின்னமணி என்பவரது இடம் உள்ளதாகவும் அவருக்கு மேற்கு பக்கம் கம்பம் சாலையை நோக்கி பாதை பாத்தியதை உள்ளதாகவும், ஆனால் மேற்படி திரு ஆர். சின்னமணி என்பவர் தனது இடத்திற்கு தெற்கு பக்கம் தங்களுக்கு சொந்தமான பாதையினை பயன்படுத்தி வணிக வளாகம் கட்ட மேற்படி பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு வரைபட அனுமதி பெற ரூ 1.00 லட்சம் கையூட்டு கொடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 16.11.2016 காலை 11.00 மணியளவில் இதனை கேட்க தங்கள் சங்கத்தினை சேர்ந்த 20. நபர்கள் பேரூாட்சி அலுவலகத்திற்கு சென்று மேற்படி சம்பவத்தினை கேட்ட போது மேற்படி பேரூராட்சி செயல் அலுவளர் திரு சித்திரைக்கனி தங்கள் குடியிருப்பு வாசிகள் அனைவரும் சேர்ந்து ரூ.10.00 லட்சம் கொடுத்தால் மேற்படி வரை பட அனுமதி தரமாட்டேன் என தெரிவித்தாக தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். மேலும் பழனிசெட்டிபட்டி பேரூராட்சியில் நிறைய நஞ்சை மற்றும் புஞ்சை நிலங்கள் அரசு அனுமதி பெறாமல் வீட்டு மனைகளாக மாற்றி விற்கப்படுவதாகவும், அவ்வாறு மாற்றி விற்று வரும் ரியல் எஸ்டேட் அதிபர்களிடம் பலகோடி ரூபாய் லஞ்சமாக பெற்றுக் கொண்டு அந்தந்த பகுதிகளில் வெறும் தட்டியை மட்டும் எச்சரிக்கையாக வைத்துவிட்டு அவ்வாறு மாற்றிய நபர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதாகவும், தாங்கள் மேற்படி பேரூராட்சி செயல் அலுவலர் மீது காவல் துறையில் புகார் அளித்ததாகவும், ஆனால் மேற்படி செயல் அலுவலர் தன்னை ஜாதியினை சொல்லி திட்டியதாக ஒரு பொய்யான புகாரினை காவல் நிலையத்தில் கொடுத்துள்ளதோடு, அவர் தலித் சமுதாயத்தை சேர்ந்தவர் என்ற ஒரே காரணத்தினை வைத்து தங்களையும்

பொதுமக்களையும் மிரட்டி வருவதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி திரு சித்திரைக்கனி பணியில் சேர்ந்தது முதல் அவரது பெயரிலும் மனைவி மற்றும் அவரது உறவினர்கள் பெயரிலும் ஏகப்பட்ட சொத்துக்களை சேர்த்துள்ளார் எனவும், வருமானத்திற்கு அதிகமாக அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் மற்றும் முதலீடுகள் சேர்த்துள்ளார் எனவும் தனது மனுவில் தெரிவித்து நடவடிக்கை கோரி இம்முறைமன்ற நடுவத்தில் மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 06.02.2017ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 107/2017/நாள் 20.02.2017ன் மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண் 1436/சி, 1436/5 சி.1, 1436/5 சி.2, 1437/5 எ, 1437/5பி, 1453/5 பி, 1453/1எ, 1438/5 பி.2, 1452/1 எ மற்றும் 1452/1பி 1 உள்ள இடத்தை திரு எம். சீனிவாசன் த/பெ திரு நம்பிசாமி நாயக்கர் என்பவர் மனைப்பிரிவுகளாக பிரித்து விற்பனை செய்யும்போது அப்பகுதி மக்களுக்கென 18 அடி அகலமுள்ள பாதையை தார்ச்சாலை அமைத்து பராமரிக்கவும், கழிவு நீர் வாய்க்கால் கட்டவும், தெருவிளக்கு அமைப்பதற்கு மின் கம்பங்கள் ஊன்றுவதற்கும் இதன் வழியாக குடிநீர் குழாய் இணைப்புகள் கொண்டு செல்ல சம்மதம் தெரிவித்து பத்திரம் எழுதி கொடுத்துள்ளார். எனவும் அதனை தொடர்ந்து மேற்கண்ட பாதையில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது வரை பேரூராட்சி பராமரிப்பில் இருந்து வருவதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பேரூராட்சி அனுமதியின்றி தற்போது லட்சுமி நகரில் குடியிருப்போர் நலச்சங்கத்தின் மூலம் மேற்படி பாதையை தடுப்பு சுவர் எழுப்பி மறைத்தபோது அப்பகுதியில் உள்ள திரு ஆர். சின்னமணி என்பவர் கொடுத்த புகாரின்பேரில் நேரடியாக பார்வையிட்டதில் பொதுப்பாதையினை மறித்து கட்டப்பட்டுள்ள தடுப்புக் சுவரை அகற்றும்படி லட்சுமி நகர் குடியிருப்போர் நலச்சங்கத் தலைவர் திரு K.P.K. சண்முகம் என்பவருக்கு பலமுறை அலைபேசி மூலமும் நேரடியாக தெரிவித்ததையும் பொருட்படுத்தாமல் மேற்படி பகுதியில் வசிக்கும் திரு கா. சண்முகம், த/பெ திரு காமாட்சிப்பிள்ளை, திரு ரா.வெங்கடேசன்,த/பெ திரு ராமச்சந்திரன், திரு சி. வளவன், த/பெ திரு சிவசாமி, திருமதி எஸ்.பாக்யலட்சுமி, க/பெ திரு சீனிவாசன், திரு ஜெ. சதீஸ்குமார், த/பெ திரு ஜெயசுதாஸ், திரு பெ.வரதராஜ், த/பெ திரு பெருமாள் நாயக்கர் ஆகியோர் மேற்படி கிழமேல் பொதுப்பாதையில் சட்டவிரோதமாக வடக்குபுரம் (திரு ஆர். செண்பகராம், த/பெ திரு ராமராஜ், திரு சின்னமணி, த/பெ திரு ராமலிங்கம் ஆகியோரது மனை இடத்திற்கு முன்பு) தடுப்பு சுவர் எழுப்பினர் எனவும். இது குறித்து திரு ஆர். செண்பகராம் என்பவர் 14.09.2016ம் நாள் தெரிவித்த புகாரின்பேரில் பேரூராட்சி துப்புரவு பணி மேற்பார்வயாளர் நேரடி ஆய்வு செய்து வழங்கிய அறிக்கையின்பேரில் மேற்படி சட்ட விரோத தடுப்பு சுவரை அகற்றிட மேற்படி சங்கத்தின் தலைவர் திரு கா. சண்முகம் (பாலாஜி கார்ஸ்) என்பவரிடம் அவரது அலைபேசியில் ( எண்

98421–50635) செயல் அலுவலர் தனது அரசு கைப்பேசி (எண் 8883100524 மற்றும் 9942116626) மூலமாகவும் பலமுறை தொடர்பு கொண்டும் நேரிலும் மேற்படி சட்டவிரோத தடுப்பு சுவரை அகற்றிட தெரிவித்த போதும் மேற்படி சட்ட விரோத தடுப்பு சுவற்றினை அகற்ற மறுத்ததோடல்லாமல் உங்களால் முடிந்ததை பாருங்கள் என கூறிவிட்டதாக பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். இதனால் மேற்படி சட்டவிரோத தடுப்பு சுவரினை அகற்றி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு ஏதுவாக தார்ச்சாலையை பழைய நிலைக்கு கொண்டு வர 16.11.2016ம் தேதி பேரூராட்சி பணியாளர்களின் மூலம் மேற்படி சுவற்றினை அகற்றும்போது திரு கா.சண்முகம் த/பெ திரு காமாட்சிப்பிள்ளை திரு ரா.வெங்கடேசன், த/பெ திரு ராமச்சந்திரன், திரு சி.வளவன், த/பெ திரு சிவசாமி, திருமதி எஸ்.பாக்கியலட்சுமி, க/பெ திரு சீனிவாசன், திரு ஜெ. சதீஷ்குமார், த/பெ திரு ஜெயசுதாஸ, திரு பெ. வரதராஜ், த/பெ திரு பெருமாள்நாயக்கர் ஆகியோரும் திரு கோபி மணிகண்டன், மற்றும் திரு லோகமணி, வழக்கறிஞர் என்பவர்களும் பேரூராட்சி பணியாளர்களின் பணியினை தடுத்ததோடல்லாமல் பேரூராட்சி நிர்வாகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் விதத்தில் குமுளி–பெரியகுளம் சாலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர் எனவும் இவர்களின் இச்செயலினால் சட்டவிரோத தடுப்பு சுவற்றினை அகற்றும் பணியானது தடைபட்டதாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு வேல்குமார், த/பெ சின்னமணி என்பவரால் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட புகார் மனுவின் அடிப்படையில் மேற்படி ஆக்கிரமிப்பு குறித்து அரசாணை எண் 540 வருவாய் LD. 6(2) துறை நாள் 04.12.2014ம் தேதிய கடிதத்தின்படி மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றி அது சம்பந்தமான நடவடிக்கை விவரத்தினை தெரிவிக்க கோரியதாகவும் தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மேலும் இது குறித்து பழனிசெட்டிபட்டி காவல் நிலைய ஆய்வாளர் அவர்களுக்கு 15.12.2016ம் தேதி மீதமுள்ள சட்டவிரோத சுவற்றினை அகற்ற தேதி நிர்ணயம் செய்து கொடுக்குமாறு கடிதம் அனுப்பப்பட்டதாகவும், இந்நிலையில் இந்த இடத்தில் அருகில் கட்டிடம் கட்டி வரும் திரு சின்னமணி, த/பெ திரு ராமலிங்கம் என்பவரால் மேற்கண்ட ஆக்கிரமிப்பினை அகற்றுவது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு தொடரப்பட்டு மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளதாக தெரிவித்து மேற்படி வழக்கின் தீர்ப்பின் தன்மையினை பொறுத்து மேற்படி ஆக்கிரமிப்பு அகற்றுவது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளலாம் என முடிவு செய்யப்பட்டதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்து மேற்படி வழக்கு எண் W.P.(MD) No.552/2017-ன் வாதுரை நகலினையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 24.08.2017ம் நாளிட்ட அழைப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுதாரர் மற்றும் பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரின் நேரடி வாக்குமூலங்களை பெறும் பொருட்டு இம்முறைமன்ற நடுவத்தில் 24.10.2017 அன்று ஆஜராக கோரி ஆணையிடப்பட்டது.

பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு மு.சித்திரைக்கனி இம்முறைமன்ற நடுவத்தில் 24.10.2017 அன்று ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

“........தான் கடந்த இரண்டு ஆண்டு காலமாக பழனிசெட்டிபட்டி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும், முறையீட்டு மனுதார் திரு K.P.K.சண்முகம் அவர்களின் 02.01.2017ம் நாளிட்ட புகார் மனு குறித்து தனக்கு தெரியும் எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இப்பொருள் தொடர்பாக திரு மாரியப்பன் என்ற செயல் அலுவலர் 20.02.02017ல் ஒரு அறிக்கை அனுப்பியுள்ளதாகவும், மனுவில் குறிப்பிட்டுள்ள பாதை பழனிசெட்டிபட்டி பேரூராட்சிக்கு சொந்தமான பாதை எனவும் தெரிவித்துள்ளார். இப்பாதையினை லட்சுமி நகர் குடியிருப்புவாசிகள், மூன்று வீடுகளை சேர்ந்தவர் இப்பாதையினை பயன்படுத்த முடியாமல் மூடிவிட்டதாக தெரிவித்தள்ளார். இது குறித்து 14.09.2016ல் திரு சின்னமணி த/பெ திரு ராமலிங்கம் என்பவர் தனக்கு புகார் அளித்துள்ளதாகவும், தான் அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது, சட்டவிரோதமானது, பிரச்சினை ஏற்படும் என பல முறை வாய்மொழியாக தெரிவித்ததாக தெரிவித்துள்ளார். ஆனால் எதிர்மனுதாரர்கள் நாங்கள் நலச்சங்கம் சார்பாக செயல்படுகிறோம் இதை அப்புறப்படுத்த முடியாது, உங்களால் முடிந்ததை பார்த்துக் கொள்ளுங்கள் எனக் கூறிவிட்டதாக தெரிவித்துள்ளார். 16.11.2016 அன்று பேரூராட்சி சார்பாக பேரூராட்சி பணியாளர்களைக் கொண்டு மேற்படி சுவற்றினை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டதாகவும், ஆனால் பாதி அளவுதான் அகற்றப்பட்டது எனவும் அதற்குள் எதிர் மனுதாரர்கள் சாலை மறியல் செய்தார்கள் எனவும் தெரிவித்துள்ளார். சாலை மறியல் செய்ததால் காவல்துறை ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அதற்கு மேல் ஆக்கிரமிப்பு அகற்றப்படாமல் விடப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார். திரு சின்னமணி என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் ஆக்கிரமிப்பு முழுவதுமாக அகற்றப்படவில்லை, பாதியளவு மட்டுமே அகற்றப்பட்டது எனக் குறிப்பிட்டு வழக்கு தொடர்ந்துள்ளதாகவும், இன்னும் அந்த வழக்கு நிலுவையில் உள்ளதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். திரு சின்னமணி வணிக வளாகம் கட்டுவதற்கு அனுமதி கோரியுள்ளதாகவும் இன்னும் மேற்படி அனுமதி வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். தான் தனது சொத்து விவர அறிக்கையினை 2007 ஆம் ஆண்டு ஆண்டிபட்டியின் செயல் அலுவலரிடம் சமர்ப்பித்துள்ளதாகவும், தான் ஆண்டிப்பட்டி காமராஜர் நகர் 4வது தெருவில் வீடு கட்டியுள்ளதாகவும் அதற்கு மருத்துவ மற்றும் ஊரக நலப்பணி இயக்குநர் அவர்களிடம் தனது மனைவியின் பெயருக்கு (திருமதி சுசீலா) அனுமதி பெற்றப்பட்டதாகவும், ரூ 22.00 லட்சத்திற்கு தனது மனைவியின் பெயரில் 2 ஏக்கர் 65 சென்ட் நிலம் வாங்கியுள்ளதாகவும் இதில் 165 தென்னை மரம் காய்ப்போடு உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மொத்தம் 4 சென்ட் வீட்டு மனையில் 2.5 சென்ட் மனையில் தரைதளம் மற்றும் முதல் தளம் கட்டியள்ளதாகவும் இரண்டாவது தளம் அமைக்க தனது மனைவியின் பெயரில் 17.06.2017ல் அனுமதி கோரியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தோப்பு ரூ 27.00 லட்சத்திற்கு வாங்கியுள்ளதாகவும் அதற்கு அனுமதி பெறாததால் பின்னேற்பு வழங்குவதற்கு உசிலம்பட்டி நலப்பணி இணை இயக்குநரிடம் இருந்து 20.06.2017ல் மருத்துவ

மற்றும் ஊரக நலப்பணி இயக்குநருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இன்னும் ஆணை பெறப்படவில்லை எனவும், தனது தந்தைக்கு சொந்தமான வீடு உள்ளதாகவும், மேற்படி தோப்பு 2016 ஆகஸ்டு மாதம் வாங்கப்பட்டதாகவும், தனது மனைவியின் சொந்த ஊர் கம்பம் புதுப்பட்டி எனவும் தெரிவித்துள்ளார். வேறு எங்கும் தனக்கும் தனது மனைவிக்கும் சொத்துக்கள் கிடையாது எனவும், மதுரை IDBI வங்கியில் ரூ 20.00 லட்சம் கடனாக பெறப்பட்டுள்ளது எனவும் மேலும் ரூ 10.00 லட்சம் இரண்டாவது தளம் கட்ட கடன் பெறப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். வீட்டு மனை , வீடு கட்டுவதற்கு கட்டணம் வங்கி வரைவோலை மூலம் பெறப்படுவதாகவும், விவசாய நிலங்களும், விளை நிலங்களும் அங்கீகாரம் இல்லாத மனைகளும் தொடர்ந்து விற்பனை நடந்து வருகிறது எனவும் இது குறித்து பேரூராட்சி அறிவிப்பு மூலம் எச்சரிக்கை செய்தாலும் விற்பனை தொடந்து நடந்து வருவதாகவும் தெரிவித்துள்ளார். திரு சின்னமணி என்பவர் தொடுத்த வழக்கு( எண் 552/2017), குறித்து தற்போது வரை எந்த ஆணையும் பிறப்பிக்கப்படவில்லை எனவும்......... தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

திரு K.P.K.சண்முகம் இம்முறைமன்ற நடுவத்தில் 24.10.2017ல் தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"..........தான் லட்சுமிநகர் குடியிருப்போர் நலச் சங்க தலைவராக இருப்பதாகவும், 12.12.2016ம் நாளிட்ட புகார் மனு தன்னால் அனுப்பப்பட்டதாக தெரிவித்துள்ளார். லட்சுமி நகர் பகுதியில் 300 குடும்பங்கள் வசிப்பதாகவும், திரு சின்னமணி என்பவர் வணிக வளாகம் கட்டி வருவதாகவும் இதற்கு உதவி செய்வதற்காக செயல் அலுவலர் திரு சித்திரைக்கனி தானும் அவருடன் பெயர் தெரியாத அடையாளம் தெரிந்த ஐந்து நபரும் பேரூராட்சிக்கு சொந்தமான டிராக்டரில் 16.11.2016 அன்று காலை சுமார் 8.00 மணியளவில் பழனிசெட்டிபட்டி ஆடிட்டர் திரு சீனிவாசன் அவர்களுக்கு சொந்தமான சர்வே எண் 1436/5சி1, சி.2 ல் தங்கள் சங்கம் சார்பாக கட்டியிருந்த சுவற்றினை மேற்கண்ட நபர்கள் அத்துமீறி உள்ளே நுழைந்து சுவற்றினை இடித்து தள்ளி அவர்கள் கொண்டு வந்த டிராக்டரில் ஏற்றி கொண்டிருந்ததை பார்த்த தானும் இப்பகுதியில் உள்ள நபர்களும் எதிர்த்து கேட்டதற்கு செயல் அலுவலர் திரு சித்திரைக்கனி திரு சின்னமணிக்கு ஆதரவாக இடிக்கிறேன் என சொன்னதாக தெரிவித்துள்ளார். மேற்படி சுவற்றினை இடிப்பதற்கு ரூ 1.00 லட்சம் கொடுத்துள்ளதாகவும் நாங்கள் ரு 10.00 லட்சம் கொடுத்தால் மேற்படி சுவற்றினை கட்டிக் கொள்ளுமாறும் தான் கண்டும் காணாமல் விட்டுவிடுவதாக தெரிவித்துள்ளதாகதெரிவித்துள்ளார். தாங்கள் இதற்கு ஒத்துக் கொள்ளாமல் பழனிசெட்டிபட்டி காவல்நிலையத்தில் புகார் செய்ததாகவும், இதனால் கோபம் அடைந்த செயல் அலுவலர், தங்கள் மீதும் தங்கள் சங்கத்தினர் மீதும் அவர் தாழ்த்தப்பட்ட வகுபபினை சேர்ந்தவர் எந்த காரணத்தினால் தங்கள் மீது SC&ST சட்டப் பிரிவுகளின் மூலம் ஒரு பொய் புகார் கொடுத்ததாகவும் தெரிவித்துள்ளார். காவல் துறை விசாரணையில் மேற்படி புகார் பொய் என நிரூபிக்கப்பட்டதாகவும், இதனை தொடர்ந்து சங்க உறுப்பினர்கள் மேற்படி செயல் அலுவலரை ஏன் இடைஞ்சல் செய்கிறீர்கள் என கேட்டதாகவும், அதற்கு திரு சின்னமணிக்கு கட்டிட வரைபட அனுமதி வழங்குவதற்காக அவரிடமிருந்து ரூ 1.00 லட்சம்

பெற்றுள்ளதாகவும் அதனால் தாங்களும் பணம் தரவேண்டும் என தெரிவித்ததாக தெரிவித்துள்ளார்.

மேலும் தாங்கள் யாரிடம் புகார் செய்தாலும் தன்னை ஒன்றும் செய்ய முடியாது எனவும் தான் தாழ்த்தப்பட்ட சமூகத்தினை சார்ந்தவர் என்பதால் தன்னை யாரும் எதுவும் செய்யமுடியாது என தெரிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் செயல் அலுவலர் திரு சித்திரைக்கனி சட்ட விரோதமாக பலரிடம் லஞ்சமாக பணம் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு சட்ட விரோதமாக விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு அதிகாரத்தினை தவறாக பயன்படுத்தி வரைபட அனுமதி கொடுத்துள்ளதாகவும் அவ்வாறு லஞ்சமாக பெற்ற பணத்தினைக் கொண்டு அவரது பெயரிலும் அவர் மனைவி திருமதி சுசீலா என்பவரின் பெயரிலும் திருநெல்வேலியில் கடந்த ஆண்டு ரூ 27.00 லட்சத்திற்கு மேல் சொத்து வாங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார். தங்கள் பகுதியில் ரூ 22.00 லட்சம் ரூபாயில் அமைக்கப்பட்ட பூங்காவிற்கு எவ்வித பராமரிப்பும் வேண்டுமென்றே செய்ய மறுப்பதாகவும், தற்போது தங்கள் பகுதிக்கு எந்த பணியும் செய்ய மறுப்பதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் தங்கள் பகுதியில் எந்த அடிப்படை வசதிகளும் இல்லாமல் உள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 13.11.2017ம் நாளிட்ட அழைப்பாணையில் முறையீட்டு மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள சாட்சிகளான திரு கே. வெங்கடேஷ், திரு ஆர். பாஸ்கரன், திரு எம். ஜெய்சந்திரன், திரு ஏ. பெருமாள்சாமி, திரு என். இளையபெருமாள் ஆகியோரின் விளக்கத்தினை பெற இம்முறைமன்ற நடுவத்தில் 08.02.2018 அன்று நேரில் ஆஜராகக் கோரி ஆணையிடப்பட்டது.

திரு A. பெருமாள் த/பெ திரு அனந்தப்பன், திரு ஆர். பாஸ்கரன், த/பெ திரு K.ராமசாமி, திரு K. வெங்கடேஷ் த/பெ திரு V. கரியமால் ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்தில் 08.02.2018 அன்று நேரில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"………தேனிமாவட்டம், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி, லட்சுமி நகரில் 300 குடும்பங்கள் வசிப்பதாகவும், இந்த பழனிசெட்டிபட்டி லட்சுமி நகர் பகுதியும், சௌடேஷ்வரி நகரும் சேர்ந்து லட்சுமிநகர் சௌடேஷ்வரி நகர் குடியிருப்போர் நலச்சங்கம் இயங்கி வருவதாகவும், இதில் ஆடிட்டர் சீனிவாசன் என்பவர் இப்பகுதியில் சுமார் 10 ஏக்கர் பரப்பளவில் மனைப்பிரிவு ஏற்படுத்தி விற்றதாகவும் மேற்படி நிலத்தினை விற்றவர் தன்னுடைய பட்டா நிலத்தில் தனியாக சாலை அமைத்துக் கொடுத்ததாகவும், தெரிவித்துள்ளனர். பக்கத்து மனைப்பிரிவு பகுதியில் திரு சின்னமணி என்பவர் நிலம் வாங்கி அதில் ஒரு வணிக வளாகம் கட்டியதாகவும் இந்த பாதையினை நோக்கி அவர் கட்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். திரு சின்னமணி என்பவருக்கு தெற்கு பகுதியில் பாதை பயன்படுத்த பாத்தியம் இல்லை எனவும் மேற்படி வணிக வளாகத்திற்கு செயல் அலுவலர் லஞ்சம் பெறுக் கொண்டு அனுமதி வழங்கியதால் மேற்படி செயல் அலுவலர் தங்களுக்கு எந்தவித அறிவிப்பும் செய்யாமல் பேரூராட்சியில் பணிபுரிபவர்கள், பேரூராட்சியின் டிராக்டர் மற்றும் JCB உடன் வந்து 7 அடி உயரத்துடன் தங்களால் கட்டப்பட்டுள்ள சுவரை உடைத்தார் எனவும் இதனை தங்கள் பகுதியினை சேர்ந்த

50 நபர்கள் ஆட்சேபணை செய்தவுடன் உடைப்பதை நிறுத்திவிட்டனர் எனவும் இது குறித்து பேச பேரூராட்சிக்கு சென்று கேட்டபோது தனக்கு அதிகாரம் உள்ளது எனவும் தங்களை தரக்குறைவாக பேசியதாகவும் தெரிவித்துள்ளனர்.

திரு சின்னமணி மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு ரூ 1.00 லட்சம் லஞ்சம் கொடுத்ததாகவும், தாங்கள் தங்கள் சங்கத்திலிருந்து ரூ 10.00 லட்சம் அளித்தால் தான் சுவற்றினை அகற்றாமல் விடுவதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர். தாங்கள் பணம் தரமாட்டோம் என சொல்லி பழனிசெட்டிபட்டி காவல் நிலையத்தில் இரண்டு நாள் கழித்து புகார் செய்ததாகவும், அதன் பின்னர் செயல் அலுவலர் தங்கள் பிரிவை சேர்ந்த 9 நபர்கள் மீது காவல் நிலையத்தில் தாழ்த்தப்பட்டோர் வன்கொடுமை சட்டத்தின் கீழ் 2 நாட்கள் கழித்து புகார் அளித்துள்ளதாக தெரிவித்துள்ளனர். காவல் நிலையத்தில் இந்த வழக்கின் மீது உண்மை இல்லை என சொல்லி வழக்கினை முடித்துவிட்டதாக தெரிவித்துள்ளனர். திரு சின்னமணி என்பவர் மதுரை கோர்ட்டில் இந்த பாதை சம்பந்தமாக வழக்கு தொடர்ந்துள்ளதாகவும் தற்போது வழக்கு நடந்து கொண்டு நிலுவையாக உள்ளதாக தெரிவித்துள்ளனர். மேற்படி சுவற்றினை இடித்த பிறகு தங்கள் பகுதிக்கு செயல் அலுவலர் வரவில்லை எனவும் தங்கள் பகுதியில் எந்த அடிப்படை வசதியும் செய்யப்படவில்லை எனவும் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர். இது குறித்து செயல் அலுவலரிடம் கேட்டதற்கு சரியாக பதில் சொல்லவில்லை எனவும், பழிவாங்கும் நோக்குடன் செயல் படுகிறார் என தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து மேற்படி பொருள் தொடர்பாக திரு ஆர். சின்னமணி, த/பெ திரு எஸ்.இராமலிங்கம் என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு எண் W.P.(MD).No.552/2017ல் வழக்கு தொடர்ந்து இதற்கான வாதுரையில் எதிர் மனுதாரர்களாக, தேனி கோட்டாட்சியர், தேனி வட்டாட்சியர் மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர், பழனிசெட்டிபட்டி ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவித்து பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமரவில் தாக்கல் செய்துள்ள எதிர் வாதுரையின் விவரத்தினை செயல் அலுவலர் தனது 08.02.2018ம் தேதிய மின்னஞ்சல் மூலம் சமரப்பித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு குறித்து பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை பெறப்பட்டு முறையீட்டு மனுதாரர், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட சாட்சிகள் ஆகியோர் விசாரிக்கப்பட்டனர். மேற்படி அறிக்கை மற்றும் விசாரணைகளின் மூலம் மேற்படி பாதை சுவர் தொடர்பாக திரு ஆர். சின்னமணி, த/பெ திரு எஸ். இராலிங்கம் என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் வழக்கு எண் W.P(MD)No. 552/2017 ல் வழக்கு தொடுத்துள்ளதும் அவ்வழக்கு நிலுவையில் உள்ளதும் தெரியவந்துள்ளது.

எனவே 2014 ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (b)ன் கீழ் நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரித்திடலாகாது. எனவே மேற்படி சட்டக்கூறுகளின்படி புகாரில்

பாதை ஆக்கிரமிப்பு மற்றும் சுவர் அகற்றுவது குறித்து இம்முறைமன்ற நடுவ விசாரணை நடவடிக்கைகள் தற்போது கைவிடலாமென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

இருப்பினும் புகார் மனுவில் தெரிவித்துள்ளவாறு பழனிசெட்டிபட்டி பேரூராட்சி செயல் அலுவலர், திரு சித்திரைக்கனி, அவர்கள் மீதான பிற லஞ்ச ஊழல் புகார்கள் மற்றும் பிற புகார்கள் (அடிப்படை வசதிகள் உட்பட) தொடர்பாக உரிய விசார்ணை/ஆய்வு மேற்காண்டு அறிக்கையினை பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கும், இம்முறைமன்ற நடுவத்திற்கும் சமர்ப்பிக்குமாறு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தேனி மண்டலம் அவர்களுக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் 2014 விதி 6(4) (1) (a) ன் கீழ் ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு மார்ச் திங்கள் 16-ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர்

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

பெறுநர்

1.திரு. K.P.K. சண்முகம்,
குடியிருப்போர் நலச்சங்கம்,
லட்சுமி நகர், சௌடேஸ்வரா நகர்,
பழனிசெட்டிபட்டி,
தேனி மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
பழனிசெட்டிபட்டி பேரூராட்சி,
தேனி மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குகநரகம்,
குறளகம்,
சென்னை–108

4.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம்,
பாலாஜி நகர்,
பழனிசெட்டிபட்டி,'
தேனி– 625 531.

செயலாளர்.